### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்!

# கரூர் மாவட்டத்தில் மாட்டு வண்டிப் பந்தயம்!

### அமைச்சர் செந்தில் பாலாஜி துவக்கி வைக்கிறார்!

கரூர், பிப்.19-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு கரூர் மாவட்ட திமுக சார்பில் மாபெரும் மாட்டு வண்டி எல்கைப் பந்தய போட்டியினை மாவட்டக் கழக செயலாளரும் அமைச்சருமான வி. செந்தில் பாலாஜி துவக்கி வைக்கிறார்.

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் நல்லாசியுடன், துணை முதலமைச்சர் இளைஞர்களின் எழுச்சி நாயகர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48வது பிறந்த நாளை முன்னிட்டு கரூர் மாவட்ட திமுக சார்பில் மாபெரும் மாட்டு வண்டி எல்கைப் பந்தயம் 23ம்தேதி (ஞாயிற்றுக்கிழமை) மாலை 3 மணிக்கு வாங்கல் சாலை அரசு காலனியில் நடைபெறுகிறது. மாவட்ட கழகத் துணைச் செயலாளர் எம்எஸ்கே. கருணாநிதி தலைமை வகிக்கிறார். கிழக்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் பி. முத்துக்குமாரசாமி வரவேற்புரை ஆற்றுகிறார். மாவட்ட கழக செயலாளர் மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி செந்தில் பாலாஜி மாட்டு வண்டி எல்கைப் பந்தயத்தை துவக்கி வைத்து பரிசுகளை வழங்குகிறார். வெற்றிபெறும் பெரிய இரட்டை மாடு முதல் பரிசு ரூ. 30,000 மற்றும் கோப்பை இரண்டாம் பரிசு 25 ஆயிரம் மற்றும் கோப்பை, மூன்றாம் பரிசு 20,000 மற்றும் கோப்பை, நான்காம் பரிசு 15 ஆயிரம் மற்றும் கோப்பை, சிறிய இரட்டை மாடு முதல் பரிசு 25ஆயிரம், மற்றும் கோப்பை, இரண்டாவது பரிசு 20 ஆயிரம் மற்றும் கோப்பை, மூன்றாவது பரிசு 15000 மற்றும் கோப்பை, நான்காம் பரிசு 10ஆயிரம் மற்றும் கோப்பை, பெரிய ஒற்றை மாடு முதல் பரிசு 20ஆயிரம், கோப்பை, இரண்டாவது பரிசு 15000 மற்றும் கோப்பை, மூன்றாவது பரிசு 10ஆயிரம் மற்றும் கோப்பை, நான்காம் பரிசு 5ஆயிரம் மற்றும் கோப்பை ஆகியவற்றை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி வழங்குகிறார்.

சட்டமன்ற உறுப்பினர்கள் இரா. மாணிக்கம், பிஆர். இளங்கோ, க. சிவகாமசுந்தரி, கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் கே.சி. பழனிசாமி, நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், சட்டத்துறை இணைச் செயலாளர் என்.மணிராஜ், நெசவாளர் அணி செயலாளர் பரணி கே.மணி, கொள்கை விளக்க துணை செயலாளர் கரூர் முரளி, சிறுபான்மை பிரிவு துணைச் செயலாளர் முனவர்ஜான், வர்த்தக அணி துணைச் செயலாளர் வே. பல்லவி ராஜா, தொழிலாளர் அணி துணைச் செயலாளர் பி. விஜயகுமார், மாநகர செயலாளர் எஸ்.பி.கனகராஜ், கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி பி . சரவணன், மாவட்ட கழக நிர்வாகிகள் டி. ராஜேந்திரன், பூவை ரமேஷ்பாபு, மகேஸ்வரி சுப்பிரமணி, பிவி.பாரத், செயற்குழு உறுப்பினர்கள் சுப .ராஜகோபால், குளித்தலை சிவராமன், காலனி செந்தில், ஆண்டாள் பாலகுருபரன், எம்.துரைராஜ், சாலைசுப்பிரமணி, என்.செல்வராஜ், வடக்கு பகுதி செயலாளர் கரூர் கணேசன், தெற்கு பகுதி செயலாளர் க. சுப்பிரமணியன், மத்திய மேற்கு பகுதி பொறுப்பாளர் ஆர் . ஜோதிபாசு, கிழக்கு பகுதி செயலாளர் கோல்டு ஸ்பாட் ஆர் எஸ் .ராஜா, மத்திய கழக பொறுப்பாளர் விஜி எஸ்.குமார், ஒன்றிய கழக செயலாளர்கள் இ. ராமர், எம்எஸ்.மணியன், கே. கருணாநிதி, எம்.ரகுநாதன், ஜி. அண்ணாதுரை, அ. சந்திரன், கே.ரவி ராஜா, கே.பாஸ்கரன், எம். ராமலிங்கம், எஸ். சுதாகர், என். மணிகண்டன், த.கார்த்திக், சி. வளர்மதி, வி.கே. வேலுசாமி, எல். கரிகாலன், ப.தியாகராஜன், சி. கதிரவன், புகழூர் நகர செயலாளர் நகர்மன்ற தலைவர் அ.குணசேகரன், பள்ளப்பட்டி நகரக் கழக பொறுப்பாளர் வாசிம் ராஜா, பொதுக்குழு உறுப்பினர்கள் என். எஸ் ஆறுமுகம், வி . கருப்பண்ணன், விகேடி ராஜ்கண்ணு, எஸ்டேட் வேலுச்சாமி, கே.சாமிநாதன், சி. கருப்பையா, பிபிசரவணன், இ.ஜாபருல்லா, சிவகாமி சண்முகம், எஸ். காளியப்பன், எம். சிவசாமி, ஏ. நஞ்சுண்டேஸ்வரன், என். ராமலிங்கம், சிவகாமசுந்தரி, பிரகுமார், பேரூர் செயலாளர்கள் கே .அம்மையப்பன், பிஎஸ்மணி, கே. முரளி ராஜா, இ.ரவீந்திரன், ஆர் மோகன்ராஜ், எம்.சசிகுமார், எம் முத்து, சி தங்கராஜ், மாவட்ட அணி அமைப்பாளர்கள் வெங்கமேடு சக்திவேல், ஆர்ஜிசரவண மூர்த்தி, ஜிம்.எம்சிவா, கே நந்தினி தேவி, கே தாசப்பிரகாஷ், ஏ.சுப்பிரமணியன், தென்னிலைபாலு, பி.சங்கர், புலவர் அருணா பொன்னுசாமி, வி. அருண், பி. மோகனசுப்பு, பழ. அப்பாசாமி, எம். ப்ரின்சி, சி.நவாஸ் கான், மா.அம்பிகாபதி, தம்பி சுதாகர், எம்.விக்ரம், கு.வடிவேல், எஸ்.செல்வராஜ், சாவி நல்லுசாமி, எஸ்மனோகர், எம்பிஎஸ்.சுரேஷ், பங்க் கேசுப்பிரமணி, விஆர். அண்ணாவேலு, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஏ. கனகராஜ், சிகே.ராஜா, எம்.பாபு, ஜி வி அருண், யுவராஜ், கிழக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் ஆர். சோமசுந்தரம், இல்ஏ.சுகுணா, டிஎஸ்பி.சுப்பிரமணியன், வி பழனிசாமி, பி.பிரபு, சி.சரவணன் முன்னிலை வகிக்கின்றனர். மாவட்ட பிரதிநிதி பி.கதிர்காமம் நன்றியுரை கூறுகிறார். ஏற்பாடுகள் கரூர் மாவட்ட தி.மு.க. சார்பில் செய்யப்பட்டுள்ளது.

# அந்துமணி சிந்துமணி



**அந்துமணி :** ஏண்டி சிந்து; நாட்டின் பொறுப்பான சமூகம், இந்து சமூகம்தான் - என்று ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் கூறியிருக்கிறாரே ?

**சிந்துமணி : ஆமாண்டி அந்து; இந்து சமூகம்தான் பொறுப்பான சமூகம் என்றால்; இஸ்லாமிய சமூகம், சீக்கிய சமூகம், ஜைன சமூகம், பௌத்த சமூகம் - போன்ற ஏனைய இந்திய சமூகங்கள் அனைத்தும் 'பொறுப்பற்ற' சமூகங்கள் என்றுதானே அர்த்தம் ஆகிறது !**

**'காவிக்கலர்' மட்டும்தான் பிடிக்கும் என்றால், ஏனைய மற்ற கலர்கள் அதாவது வண்ணங்கள் அனைத்தும் பிடிக்காதவை, வெறுப்பவை என்றுதானே பொருள் !**

### புதிய கல்விக் கொள்கையை ஏற்க ஆணவமாக பேசிய

# ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானுக்கு கண்டனம்!

### தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாநில தலைவர் கு.தியாகராஜன் அறிக்கை!



சென்னை, பிப்.19-

தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாநில தலைவர் கு.தியாகராஜன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு;

ஒன்றிய அரசின் புதிய கல்விக் கொள்கையை ஏற்றால்தான் தமிழ்நாட்டு அரசுக்கு ஒதுக்க வேண்டிய நிதி வழங்கப்படும் என்ற ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானின் பேச்சு ஒட்டுமொத்த தமிழ்நாட்டை கலங்கடித்து இருக்கிறது. ஆசிரியர், மாணவர் சமுதாயத்தை தாண்டி பொதுமக்கள் மத்தியிலும் இது மிகுந்த வருத்தத்தையும் கோபத்தையும் ஏற்படுத்தி இருக்கிறது.

கடந்த 2004 ஆம் ஆண்டு ஒன்றிய அரசு பங்களிப்பு மற்றும் மாநில அரசு பங்களிப்புடன் அனைவருக்கும் கல்வித் திட்டம் ( சர்வ சிக்ஷா அபியான்.SSA) உருவாக்கப்பட்டது அதைத் தொடர்ந்து அத்திட்டம் அனைவருக்கும் இடைநிலை கல்வி திட்டமாக(RMSA) மாற்றம் செய்யப்பட்டு இரண்டு அரசுகளின் பங்களிப்பின் மூலம் நடைபெற்று வந்தது.

இத்திட்டத்தில் கடந்த 2023ஆம் ஆண்டு பி எம் ஸ்ரீ என்ற பள்ளிகள் புதிதாக உருவாக்கப்படும் எனவும் இந்தப் பள்ளிகளில் மும்மொழி கொள்கை கடைபிடிக்கப்படும் எனவும் ஒன்றிய அரசு ஒரு திட்டத்தை கொண்டு வந்து அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும் என தமிழ்நாட்டு அரசை தொடர்ந்து வலியுறுத்தி வந்தது. ஆனால் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இருமொழிக் கொள்கை பல ஆண்டுகளாக தொடர்ந்து கடைபிடிக்கப்பட்டு வரும் சூழலில் மும்மொழிக் கொள்கையை ஏற்க முடியாது இந்த பி எம் ஸ்ரீ பள்ளிகளில் தமிழ்நாட்டில் அமல்படுத்திட முடியாது, எந்த வகையிலும் இந்தி திணிப்பை ஏற்றுக் கொள்ள முடியாது என்ற உறுதியோடு இதுவரை தமிழ்நாடு அரசு அதில் கையொப்பம் இடவில்லை அதை காரணமாக வைத்து தற்பொழுது புதிய கல்விக் கொள்கையை முழுவதுமாக ஏற்றால்தான் தமிழ்நாட்டிற்கு ஒதுக்க வேண்டிய நிதியை ஒதுக்க முடியும் என்று ஒன்றிய கல்வி அமைச்சர் தெரிவித்திருப்பது மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது .

தமிழ்நாட்டில் இரு மொழி கல்விக் கொள்கை பல ஆண்டுகளாக தொடர்ந்து கடைபிடிக்கப்பட்டு வருகிறது. மேலும் தமிழ்நாட்டின் கல்வித்தரம் இந்திய ஒன்றியத்திலே முன்னிலையில் உள்ளது.

பல்வேறு கல்வியாளர்கள் முதல் அறிவியல் அறிஞர்கள் வரை தமிழ்நாட்டு இரு மொழி கல்விக் கொள்கையில் பயின்றவர்கள் என்பதை மறந்து விட முடியாது.

தமிழ்நாட்டில் கல்வி, கலாச்சாரம், பண்பாடு, முதலியவற்றை கருத்தில் கொண்டு தாய் மொழியாம் தமிழ் மொழியை பாதுகாத்திடும் நோக்கோடு தமிழகத்திற்கென்று இருமொழி கல்விக் கொள்கை பல ஆண்டுகளாக பின்பற்ற பட்டு வருகிறது.

கடந்த காலங்களில் எந்த ஒன்றிய அரசும், தமிழ்நாடு அரசின் இரு மொழி கல்விக் கொள்கையில் தலையிட்டதில்லை, அவ்வாறு தலையிட்டு வெற்றி கொண்ட வரலாறு இல்லை .

அந்த வகையில் ஒன்றிய அரசு கொண்டுவந்துள்ள புதிய கல்விக் கொள்கையில் மும்மொழி கல்வி கொள்கை ஏற்க வேண்டும் எனவும்,அதன் அடிப்படையில் இயங்கும் பி எம் ஸ்ரீ பள்ளிகளின் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழ்நாடு அரசு கையெழுத்திட்டால்தான் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கக்கூடிய நிதியை ஒதுக்க முடியும் என்று என்று சொல்லி இருப்பது மிகுந்த கண்டனத்திற்குரியது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்தியாவிலேயே வேறு எந்த முதலமைச்சரும், செய்யாத வகையில் துணிந்து, துணிச்சலோடு தமிழ்நாட்டிற்கு இன்று ஒரு கல்விக் கொள்கையை உருவாக்க குழு அமைத்து அந்த குழுவின் அறிக்கை தற்போது பெறப்பட்டுள்ளது.

விரைவில் மாநிலக் கல்விக் கொள்கை அறிவிப்பு வெளியிடப்பட உள்ள சூழலில் புதிய கல்விக் கொள்கையை தமிழ்நாடு அரசு எப்படி ஏற்க முடியும்

ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ள புதிய கல்விக் கொள்கையில் இடம்பெற்றிருக்கும் மும்மொழி கல்விக் கொள்கை, குலக்கல்வி கொள்கை, 3,5.8 வகுப்புகளுக்கு பொது தேர்வு இவற்றையெல்லாம் ஏற்க வேண்டும் என சொல்வதை எப்படி ஏற்க முடியும்.

ஒருபோதும் தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொள்ளாது

இந்திய ஒன்றியத்திற்கு அதிக வரி வருவாய் வழங்கும் முதன்மை மாநிலங்களில் ஒன்றான தமிழ்நாட்டிற்கு ஒதுக்க வேண்டிய நிதியை சர்வதிகார நோக்கத்தோடு ஒதுக்க மாட்டோம் என்று சர்வாதிகாரத்தோடு ஒன்றிய அமைச்சர் சொல்வது கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிரானது.

இதை தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம் வன்மையாக கண்டிக்கிறது.

நாங்கள் உழைத்து எங்கள் உழைப்பின் மூலமாக நாங்கள் செலுத்தக்கூடிய வரி வருவாய் பெருமளவுக்கு பங்கு போட்டு கொண்டு ஆட்சி நடத்துகின்ற ஒன்றிய அரசு எங்களுடைய 40 இலட்சத்திற்கு மேற்பட்ட ஏழை எளிய அரசு பள்ளி மாணவர்களின் வாழ்வதாரத்தை கேள்விக்குறியாக்குவதை ஒரு போதும் ஏற்றுக் கொள்ள மாட்டோம்.

இது கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிரானது.

தமிழ்நாட்டிற்கு வழங்கக்கூடிய நிதியை வழங்காமல் தொடர்ந்து வழங்காமல் தமிழக மாணவர்களை ஒன்றிய அரசு வஞ்சித்தால் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கரத்தை வலுப்படுத்தக்கூடிய வகையில் தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம் ஒட்டுமொத்த ஆசிரியர் சங்கங்களை ஒன்றிணைந்து மிகப்பெரிய போராட்டத்தை ஒன்றிய அரசுக்கு எதிராக முன்னெடுப்போம்.

இவ்வாறு கு.தியாகராஜன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## தி.மு.க. தொண்டர் அணி

## மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

**கழக தொண்டர் அணிச் செயலாளர் மாஸ்டர் பெ.சேகர் அறிவிப்பு!**

தி.மு.க. தொண்டர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் வருகிற 21-2-2025 வெள்ளிக்கிழமை, காலை 11.00 மணியளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் தி.மு.க. தொண்டர் அணி மாநில நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: **தமிழ்நாடு முதலமைச்சர் – கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள்.**

**"அண்ணா அறிவாலயம்"** சென்னை - 18 நாள்- 17.02.2025

மாஸ்டர் **பெ.சேகர்** செயலாளர், தி.மு.க. தொண்டர் அணி.

### தமிழ்நாட்டு மக்களிடம் அடிவாங்கும் போதெல்லாம்

# பா.ஜ.க.வை காப்பாற்றும் வேலையைச் செய்யும் அ.தி.மு.க. அடிமைகள்!

### எம்.எம்.அப்துல்லா எம்.பி. கடும் தாக்கு!



சென்னை, பிப்.19-

பா.ஜ.க. எப்போதெல்லாம் தமிழ்நாட்டு மக்களிடம் அடி வாங்குகிறதோ, அப்போதெல்லாம் குறுக்கே புகுந்து காப்பாற்றும் வேலையைச் செய்வது இங்கிருக்கும் அ.தி.மு.க. அடிமைகள் என தி.மு.க. அயலக அணிச் செயலாளரும், எம்பியுமான எம்.எம்.அப்துல்லா எக்ஸ் தளத்தில் பதிலடி தந்துள்ளார்.

எம்.எம்.அப்துல்லா கூறியிருப்பதாவது :-

பாஜக எப்போதெல்லாம் தமிழ்நாட்டு மக்களிடம் அடி வாங்குகிறதோ, அப்போதெல்லாம் குறுக்கே புகுந்து காப்பாற்றும் வேலையைச் செய்வது இங்கிருக்கும் அ.தி.மு.க. அடிமைகள்.

ஒன்றிய அரசின் சர்வாதிகார நடவடிக்கைகளை இவர்களும் எதிர்க்க மாட்டார்கள். எதிர்க்கும் திமுகவுடன் துணையாகவும் நிற்க மாட்டார்கள்.

#PMSHRI திட்டம் குறித்து முடிவெடுப்பதற்கு மாநில அளவிலான குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது, அதனடிப்படையில் முடிவெடுக்கப்படும் என்பதுதான் தலைமைச் செயலாளரின் கடிதத்தில் இருக்கும் செய்தி. ஆனால் அதை மறைத்துவிட்டு, பா.ஜ.க. பரப்பும் அதே பொய்யை அடிமைகளும் பரப்புகிறார்கள்.

இருமொழிக் கொள்கை உள்ளிட்ட தமிழ்நாட்டின் எந்த தத்துவார்த்த நிலைப்பாடும் அதிமுகவால் முன்னெடுக்கப்பட்டது அல்ல. அத்தனையுமே திமுகவால் முன்னெடுக்கப்பட்டு மக்களிடம் கொண்டுசெல்லப்பட்டவை. அவற்றின் மீது கைவைத்தால் மக்களின் எதிர்ப்பை சம்பாதிக்க வேண்டியது வரும் என்பதற்காக தாங்களும் அந்த நிலைப்பாட்டில் இருப்பது போல் நடிக்கும் கட்சிதான் அதிமுக. அவர்களுக்கென்று கொள்கை நிலைப்பாடுகளோ, போராட்ட வரலாறோ இல்லை.

தமிழ்நாட்டு மக்களின் உரிமைகளை ஒன்றிய பா.ஜ.க. அரசு எவ்வளவு பறித்தாலும், கூச்சமின்றி அவர்களின் காலில் விழுந்து, ஏலம் எடுத்து வைத்துள்ள தங்களது கட்சிப் பொறுப்பை காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்பது மட்டுமே அதிமுகவின் நிரந்தரக் கொள்கை.

இவ்வாறு எம்.எம்.அப்துல்லா எம்.பி. தெரிவித்துள்ளார்.

# தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம்!

### மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிக்கை!



தஞ்சாவூர் பிப். 19-

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் 22.02.2025 சனிக்கிழமை மாலை 04.00 மணிக்கு நடைபெற உள்ளதாக மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் வருகின்ற 22.02.2025 சனிக்கிழமை மாலை 04.00 மணிக்கு கும்பகோணம் சகாஜிநாயக்கன் தெரு, தஞ்சை வடக்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்டச் செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் க.நசீர்முகமது தலைமையில் நடைபெற உள்ளது.

அதுசமயம் கூட்டத்தில் முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு. பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் குறித்த நேரத்தில் தவறாது கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : மார்ச்1 கழக தலைவர், தமிழக முதல்வர் அவர்களின் பிறந்த நாள் விழா, மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி சார்பு அணி நியமித்தல், வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி, கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

## தி.மு.க. மாணவர் அணி

## மாவட்ட, மாநகர, மாநில அமைப்பாளர்-துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

**மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ. அறிவிப்பு!**

தி.மு.க. மாணவர் அணியின் மாவட்ட, மாநில அமைப்பாளர்கள் கூட்டம், வருகிற 21-02-2025 வெள்ளிக்கிழமை, காலை 09.00 மணியளவில், சென்னை, தேனாம்பேட்டை, அண்ணாசாலை, "அண்ணா அறிவாலயத்தில்", எனது தலைமையில், மாநில மாணவர் அணித் தலைவர் இரா. ராஜீவ்காந்தி - இணைச் செயலாளர்கள் சி. ஜெரால்டு, எஸ். மோகன் மற்றும் துணைச் செயலாளர்கள் மன்னை த. சோழராஜன், சேலம் ரா. தமிழரசன், அதலை பி. செந்தில் குமார், கா. அமுதரசன், பி.எம். ஆனந்த், வி.ஜி. கோகுல், திருமதி பூர்ணசங்கீதா, திருமதி ஜெ. வீரமணி, ஜெ. இராமகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

அதுபோது மாவட்ட, மாநகர, மாநில அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் மட்டும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 1) கழகத் தலைவர் -தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள்; 2) மாணவர் அணி ஆக்கப் பணிகள் - குறித்து.

**"அண்ணா அறிவாலயம்"** சென்னை. நாள்- 17.02.2025

**சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ.** செயலாளர், தி.மு.க. மாணவர் அணி



மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகார் சட்ட மன்றத் தொகுதியில் பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன் ஏற்பாட்டில் இரண்டாம் மக்கள் குறைதீர்க்கும் முகாம் செம்பனார்கோயில் ஒன்றியம் திருக்களாச்சேரியில் நடைபெற்றது.முகாமில் பொதுமக்களிடம் மனுக்களை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்ய நாதன் பெற்றார். உடன் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன், சட்டமன்ற உறுப்பினர்கள்சீர்காழி எம். பன்னீர்செல்வம்,எஸ். ராஜ்குமார் மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் ஆர் சுதா, ஒன்றிய செயலாளர்கள் எம் அப்துல் மாலிக், பி. எம்.அன்பழகன் அமிர்த. விஜயகுமார் மற்றும் பலர் உள்ளனர்.

## தி.மு.க. தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

**தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ் அறிவிப்பு!**

தி.மு.க. தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 22-02-2025 சனிக்கிழமை, காலை 10.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், எனது தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் மாநில தொழிலாளர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள்

**"அண்ணா அறிவாலயம்"** சென்னை - 18 நாள்- 17.02.2025

**பிடிசி ஜி.செல்வராஜ்,** செயலாளர், தி.மு.க. தொழிலாளர் அணி.



நாகை மாவட்டம் வேதாரண்யம் ஒன்றியம் ஆயக்காரன்புலம்3 ஊராட்சியில் உள்ள அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற விழாவில் தமிழ் இலக்கிய திறனாய்வு தேர்வில் தேர்ச்சி பெற்ற 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகளை மாவட்ட பொறுப்பு அமைச்சரும், பள்ளி கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழங்கினார் உடன் நாகை மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழக தலைவருமான என்.கௌதமன், நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் ப. ஆகாஷ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் க. மறைமலை, மாநில மீனவர் அணி துணை செயலாளர் ஜி. மனோகரன், மாவட்ட கழக துணை செயலாளர் சோ.ரவிச்சந்திரன், ஒன்றிய கழக செயலாளர்கள் உதயம் வே. முருகையன், என்.சதாசிவம், மகா.குமார், வேதாரண்யம் நகர கழக செயலாளர்.மா.மீ.புகழேந்தி, பொதுக்குழு உறுப்பினர் எல். எஸ். ஈ.பழனியப்பன் மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் ஆர்.துரைராஜ், மாவட்ட இலக்கிய அணி தலைவர் சித கருணாநிதி மற்றும் பலர் உள்ளனர்.